# இறை வார்த்தை

1 தேவன் பேசிச் சொல்லிய சகல வார்த்தைகளுமாவன: 2 உன்னை
அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய
கர்த்தர் நானே. 3 என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.
4 மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும்
உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு
விக்கிரத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம். 5 நீ அவைகளை
நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான்
எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப்
பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம்
தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். 6 என்னிடத்தில் அன்புகூர்ந்து, என்
கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும்
இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன்.

7 உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.
கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

8 ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. 9 ஆறுநாளும் நீ
வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக. 10 ஏழாம்நாளோ உன்
தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள். அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும்,
உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன்
வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற
அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம். 11 கர்த்தர்
ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள
எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார். ஆகையால், கர்த்தர்
ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.

12 உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள்
நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

13 கொலை செய்யாதிருப்பாயாக.

14 விபசாரம் செய்யாதிருப்பாயாக.

15 களவு செய்யாதிருப்பாயாக.

16 பிறனுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக

17 பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக. பிறனுடைய மனைவியையும்,
அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய
எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும்
இச்சியாதிருப்பாயாக என்றார்.

(யாத்திராகமம் 20:1-17)

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

[1] தேவன் யாக்கோபை நோக்கி: நீ எழுந்து பெத்தேலுக்குப் போய், அங்கே
குடியிருந்து, நீ உன் சகோதரனாகிய ஏசாவின் முகத்திற்கு விலகி ஓடிப்போகிறபோது,
உனக்குத் தரிசனமான தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்கு என்றார். [2]
அப்பொழுது யாக்கோபு தன் வீட்டாரையும் தன்னோடேகூட இருந்த மற்ற
அனைவரையும் நோக்கி: உங்களிடத்தில் இருக்கிற அந்நிய தெய்வங்களை
விலக்கிப்போட்டு, உங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு, உங்கள் வஸ்திரங்களை
மாற்றுங்கள்.

(ஆதியாகமம் 35:1-2)

[22] அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே
சொல்லவேண்டியது என்னவென்றால், நான் வானத்திலிருந்து உங்களோடே பேசினேன்
என்று கண்டீர்கள். [23] நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலே தெய்வங்களையும்
பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம்.

(யாத்திராகமம் 20:22-23)

[18] சூனியக்காரியை உயிரோடே வைக்கவேண்டாம். [19] மிருகத்தோடே
புணருகிறவன் எவனும் கொல்லப்படவேண்டும். [20] கர்த்தர் ஒருவருக்கே ஒழிய வேறே
தேவர்களுக்குப் பலியிடுகிறவன் சங்கரிக்கப்படக்கடவன்.

(யாத்திராகமம் 22:18-20)

[13] நான் உங்களுக்குச் சொன்னவைகள் யாவற்றிலும் சாவதானமாயிருங்கள்.
அந்நிய தேவர்களின் பேரைச் சொல்லவேண்டாம். அது உன் வாயிலிருந்து
பிறக்கக்கேட்கப்படவும் வேண்டாம்.

(யாத்திராகமம் 23:13)

[24] நீ அவர்களுடைய தேவர்களைப் பணிந்துகொள்ளாமலும், சேவியாமலும்,
அவர்கள் செய்கைகளின்படி செய்யாமலும், அவர்களை நிர்மூலம்பண்ணி,
அவர்களுடைய சிலைகளை உடைத்துப்போடுவாயாக.[25] உங்கள் தேவனாகிய
கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள். அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும்
ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன். [26] கர்ப்பம் விழுகிறதும்
மலடும் உன் தேசத்தில் இருப்பதில்லை. உன் ஆயுசுநாட்களைப் பூரணப்படுத்துவேன்.

(யாத்திராகமம் 23:24-26)

[31] சிவந்த சமுத்திரம் தொடங்கி பெலிஸ்தரின் சமுத்திரம்வரைக்கும், வனாந்தரம்
தொடங்கி நதிவரைக்கும் உன் எல்லையாயிருக்கும்படி செய்வேன். நான் அந்தத்

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

தேசத்தின் குடிகளை உங்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன். நீ அவர்களை உன் முன்னின்று துரத்திவிடுவாய். [32] அவர்களோடும் அவர்கள் தேவர்களோடும் நீ உடன்படிக்கை பண்ணாதிருப்பாயாக. [33] அவர்கள் உன்னை எனக்கு விரோதமாகப் பாவஞ் செய்யப்பண்ணாதபடிக்கு உன் தேசத்திலே குடியிருக்கவேண்டாம். நீ அவர்கள் தேவர்களைச் சேவித்தால், அது உனக்குக் கண்ணியாயிருக்கும் என்றார்.

(யாத்திராகமம் 23:31-33)

[7] அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ. எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக்கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள். [8] அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள். அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்துகொண்டு, அதற்குப் பலியிட்டு: இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்று சொன்னார்கள் என்றார்.
[9] பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த ஜனங்களைப் பார்த்தேன், இவர்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள்.
[10] ஆகையால் என் கோபம் இவர்கள் மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப்போடவும் நீ என்னை விட்டுவிடு. உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்றார்.

(யாத்திராகமம் 32:7-10)

[1] நீங்கள் உங்களுக்கு விக்கிரகங்களையும் சுரூபங்களையும் உண்டாக்காமலும், உங்களுக்குச் சிலையை நிறுத்தாமலும், சித்திரந்தீர்ந்த கல்லை நமஸ்கரிக்கும்பொருட்டு உங்கள் தேசத்தில் வைக்காமலும் இருப்பீர்களாக, நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.

(லேவியராகமம் 26:1)

[14] உன் தேவனாகிய கர்த்தருடைய கோபம் உன்மேல் மூண்டு, உன்னைப் பூமியில் வைக்காமல் அழித்துப்போடாதபடிக்கு, உங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களின் தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றாதிருப்பீர்களாக.

(உபாகமம் 6:14)

[25] அவர்கள் தேவர்களின் விக்கிரகங்களை அக்கினியினால் சுட்டெரிக்கக்கடவாய், நீ அவைகளால் சிக்கிக்கொள்ளாதபடிக்கு, அவைகளில் இருக்கிற வெள்ளியையும் பொன்னையும் இச்சியாமலும், அதை எடுத்துக்கொள்ளாமலும் இருப்பாயாக, அவைகள் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவைகள்.
[26] அவைகளைப்போல நீ சாபத்துக்குள்ளாகாதபடி அருவருப்பானதை உன் வீட்டிலே கொண்டுபோகாயாக, அதைச் சீ என்று வெறுத்து முற்றிலும் அருவருக்கக்கடவாய், அது சாபத்திற்குள்ளானது.

(உபாகமம் 7:25-26)

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

2 நீங்கள் துரத்திவிடும் ஜாதிகள் தங்கள் தேவர்களைச் சேவித்த உயர்ந்த
மலைகளின்மேலும், மேடுகளின்மேலும், பச்சையான சலக மரங்களின் கீழுமுள்ள
இடங்களையெல்லாம் முற்றிலும் அழித்து, 3 அவர்கள் பலிபீடங்களை இடித்து,
அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை அக்கினியால் சுட்டெரித்து,
அவர்கள் தேவர்களின் விக்கிரகங்களை நொறுக்கி, அவைகளின் பேரும் அவ்விடத்தில்
இராமல் அழியும்படி செய்யக்கடவீர்கள்.

(உபாகமம் 12:2-3)

30 அவர்கள் உனக்கு முன்பாக அழிக்கப்பட்டபின்பு, நீ அவர்களைப் பின்பற்றிச்
சிக்கிக்கொள்ளாதபடிக்கும், இந்த ஜாதிகள் தங்கள் தேவர்களைச் சேவித்தபடி நானும்
சேவிப்பேன் என்று சொல்லி அவர்களுடைய தேவர்களைக்குறித்துக் கேட்டு
விசாரியாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. 31 உன் தேவனாகிய கர்த்தருக்கு அப்படிச்
செய்யாயாக, கர்த்தர் வெறுக்கிற அருவருப்பான யாவையும் அவர்கள் தங்கள்
தேவர்களுக்குச் செய்து, தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தங்கள்
தேவர்களுக்கு அக்கினியிலே சுட்டெரித்தார்களே.

(உபாகமம் 12:30-31)

1 உங்களுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசியாகிலும், சொப்பனக்காரனாகிலும் எழும்பி:
2 நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றி, அவர்களைச் சேவிப்போம்
வாருங்கள் என்று சொல்லி, உங்களுக்கு ஒரு அடையாளத்தையும் அற்புதத்தையும்
காண்பிப்பேன் என்று குறிப்பாய்ச் சொன்னாலும், அவன் சொன்ன அடையாளமும்
அற்புதமும் நடந்தாலும், 3 அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும்
சொல்லுகிறவைகளைக் கேளாதிருப்பீர்களாக, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில்
நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும்
அன்புகூறுகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர்
உங்களைச் சோதிக்கிறார். 4 நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின்பற்றி,
அவருக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவர் சத்தத்தைக் கேட்டு,
அவரைச் சேவித்து, அவரைப் பற்றிக்கொள்வீர்களாக. 5 அந்தத் தீர்க்கதரிசியும், அந்தச்
சொப்பனக்காரனும் கொலைசெய்யப்படக்கடவன், நீங்கள் நடக்கும்படி உங்கள்
தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு விதித்த வழியை விட்டு உங்களை விலக்கும்படி,
அவன், உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவரும் உங்களை
அடிமைத்தன வீட்டிலிருந்து நீங்கலாக்கி மீட்டுக்கொண்டவருமான உங்கள் தேவனாகிய
கர்த்தருக்கு விரோதமான துரோகப்பேச்சைப் பேசினான், இப்படிப்பட்ட தீமையை
உங்களிடத்திலிருந்து விலக்குவீர்களாக.

6 உன் தாய்க்குப் பிறந்த உன் சகோதரனாகிலும், உன் குமாரனாகிலும், உன்
குமாரத்தியாகிலும், உன் மார்பிலுள்ள உன் மனைவியாகிலும், உன்
பிராணனைப்போலிருக்கிற உன் சிநேகிதனாகிலும் உன்னை நோக்கி: நாம் போய்
வேறே தேவர்களைச் சேவிப்போம் வாருங்கள் என்று சொல்லி, 7 உன்னைச் சுற்றிலும்
உனக்குச் சமீபத்திலாகிலும் உனக்குத் தூரத்திலாகிலும், தேசத்தின் ஒருமுனை
தொடங்கி மறுமுனைமட்டுமுள்ள எவ்விடத்திலாகிலும் இருக்கிற ஜனங்களுடைய

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

தேவர்களில், நீயும் உன் பிதாக்களும் அறியாத அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி
இரகசியமாய் உன்னை ஏவிவிட்டால், [8] நீ அவனுக்குச் சம்மதியாமலும், அவனுக்குச்
செவிகொடாமலும், உன் கண் அவன்மேல் இரக்கங்கொள்ளாமலும், அவனைத்
தப்பவிடாமலும், அவனை ஒளித்து வைக்காமலும், [9] அவனைக்
கொலைசெய்துபோடவேண்டும், அவனைக் கெலைசெய்வதற்கு, முதல் உன் கையும்
பின்பு சகல ஜனத்தின் கையும் அவன்மேல் இருக்கக்கடவது.[10] அடிமைத்தன வீடாகிய
எகிப்து தேசத்திலிருந்து உன்னைப் புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தரை
விட்டு விலகும்படி அவன் உன்னை ஏவினபடியினால், அவன் சாகும்படி அவன்மேல்
கல்லெறியக்கடவாய். [11] இஸ்ரவேலர் யாவரும் அதைக் கேட்டுப் பயந்து, இனி உன்
நடுவே இப்படிப்பட்ட தீமையான காரியத்தைச் செய்யாதிருப்பார்கள்.

[12] உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் குடியிருக்கும்படி கொடுக்கும்
பட்டணங்கள் ஒன்றில் பேலியாளின் மக்களாகிய துஷ்ட மனிதர் உன்னிடத்திலிருந்து
புறப்பட்டு, [13]நீங்கள் அறியாத வேறே தேவர்களைச் சேவிக்கப்போவோம் வாருங்கள்
என்று தங்கள் பட்டணத்தின் குடிகளை ஏவினார்கள் என்கிற செய்தியைக்
கேள்விப்படும்போது, [14]நீ நன்றாய் விசாரித்து, கேட்டாராய்ந்து, அப்படிப்பட்ட காரியம்
உன் நடுவே நடந்தது மெய்யும் நிச்சயமும் என்று காண்பாயானால், [15]அந்தப்
பட்டணத்தின் குடிகளைப் பட்டயக்கருக்கினால் வெட்டி, அதையும் அதிலுள்ள
யாவற்றையும் அதின் மிருகஜீவன்களையும் பட்டயக்கருக்கினால் சங்காரம்பண்ணி, [16]
அதில் கொள்ளையிட்டதையெல்லாம் அதின் நடுவீதியிலே கூட்டி, உன் தேவனாகிய
கர்த்தருக்கு என்று அந்தப் பட்டணத்தையும், அதில் கொள்ளையிடப்பட்ட யாவற்றையும்
முழுவதும் அக்கினியில் சுட்டெரிக்கக்கடவாய், அது இனிக் கட்டப்படாமல், நித்திய
மண்மேடாயிருக்கக்கடவது. [17] சபிக்கப்பட்ட பொருளில் ஒன்றும் உன் கையில்
இருக்கவேண்டாம். நான் இன்று உனக்குக் கற்பிக்கிற உன் தேவனாகிய கர்த்தரின்
கற்பனைகளையெல்லாம் நீ கைக்கொண்டு, உன் தேவனாகிய கர்த்தருடைய
பார்வைக்குச் செம்மையானதைச் செய்யும்படி, அவர் சத்தத்திற்குச்
செவிகொடுப்பாயானால். [18] கர்த்தர் தமது கோபத்தின் உக்கிரத்தைவிட்டுத் திரும்பி,
உனக்குத் தயைசெய்து, உனக்கு இரங்கி, அவர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டபடி
உன்னை விருத்தியடையப்பண்ணுவார்.

(உபாகமம் 13:1-18)

[16] நாம் எகிப்து தேசத்தில் குடியிருந்ததையும், நாம் கடந்துவந்த
இடங்களிலிருந்த ஜாதிகளின் நடுவில் நடந்து வந்ததையும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.
[17] அவர்களுடைய அருவருப்புகளையும், அவர்களிடத்திலிருக்கிற மரமும் கல்லும்
வெள்ளியும் பொன்னுமான அவர்களுடைய நரகலான தேவர்களையும்
கண்டிருக்கிறீர்கள். [18] ஆகையால், அந்த ஜாதிகளின் தேவர்களைச் சேவிக்கப்
போகும்படி, இன்று நம்முடைய தேவனாகிய கர்த்தரைவிட்டு அகலுகிற இருதயமுள்ள
ஒரு புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் குடும்பமாகிலும் கோத்திரமாகிலும் உங்களில்
இராதபடிக்கும், நஞ்சையும் எட்டியையும் முளைப்பிக்கிற யாதொரு வேர் உங்களில்
இராதபடிக்கும் பாருங்கள்.

(உபாகமம் 29:16-18)

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

15 யெஷூரன் கொழுத்துப்போய் உதைத்தான், கொழுத்து ஸ்தூலித்து, நிணம்
துன்னினபோது, தன்னை உண்டாக்கின தேவனைவிட்டு, தன் ரட்சிப்பின் கன்மலையை
அசட்டைபண்ணினான். 16 அந்நிய தேவர்களால் அவருக்கு எரிச்சலை மூட்டினார்கள்,
அருவருப்பானவைகளினால் அவரைக் கோபப்படுத்தினார்கள். 17 அவர்கள் தேவனுக்குப்
பலியிடவில்லை, தாங்கள் அறியாதவைகளும், தங்கள் பிதாக்கள் பயப்படாதவைகளும்,
நூதனமாய்த் தோன்றிய புது தெய்வங்களுமாகிய பேய்களுக்கே பலியிட்டார்கள். 18
உன்னை ஜெனிப்பித்த கன்மலையை நீ நினையாமற்போனாய், உன்னைப் பெற்ற
தேவனை மறந்தாய்.

(உபாகமம் 32:15-18)

6 நான் முந்தினவரும், நான் பிந்தினவருந்தானே, என்னைத்தவிரத் தேவன்
இல்லையென்று, இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தரும், சேனைகளின் கர்த்தராகிய
அவனுடைய மீட்பரும் சொல்லுகிறார்.

7 பூர்வகாலத்து ஜனங்களை நான் ஸ்தாபித்தது முதற்கொண்டு, என்னைப்போல
எதையாகிலும் வரவழைத்து, இன்னின்னதென்று முன்னறிவித்து, எனக்கு முன்னே
வரிசையாக நிறுத்தத்தக்கவன் யார்? நிகழ்காரியங்களையும் வருங்காரியங்களையும்
தங்களுக்கு அவர்கள் அறிவிக்கட்டும்.

8 நீங்கள் கலங்காமலும் பயப்படாமலும் இருங்கள், அக்காலமுதற்கொண்டு நான்
அதை உனக்கு விளங்கப்பண்ணினதும் முன்னறிவித்ததும் இல்லையோ? இதற்கு
நீங்களே என் சாட்சிகள், என்னைத்தவிரத் தேவனுண்டோ? வேறொரு கன்மலையும்
இல்லையே, ஒருவனையும் அறியேன்.

(ஏசாயா 44:6-8)

5 நானே கர்த்தர், வேறொருவர் இல்லை, என்னைத்தவிரத் தேவன் இல்லை. 6
என்னைத்தவிர ஒருவரும் இல்லையென்று சூரியன் உதிக்கிற திசையிலும், அது
அஸ்தமிக்கிற திசையிலும் அறியப்படும்படிக்கு நீ என்னை அறியாதிருந்தும், நான்
உனக்கு இடைக்கட்டு கட்டினேன், நானே கர்த்தர், வேறொருவர் இல்லை. 7 ஒளியைப்
படைத்து, இருளையும் உண்டாக்கினேன், சமாதானத்தைப்படைத்துத் தீங்கையும்
உண்டாக்குகிறவர் நானே, கர்த்தராகிய நானே இவைகளையெல்லாம் செய்கிறவர். 8
வானங்களே, உயர இருந்து சொரியுங்கள், ஆகாயமண்டலங்கள்
நீதியைப்பொழியக்கடவது, பூமி திறவுண்டு, இரட்சிப்பின் கனியைத்தந்து, நீதியுங்கூட
விளைவதாக, கர்த்தராகிய நான் இவைகளை உண்டாக்குகிறேன். 9
மண்ணோடுகளுக்கொத்த ஓடாயிருந்தும், தன்னை உருவாக்கினவரோடே
வழக்காடுகிறவனுக்கு ஐயோ! களிமண் தன்னை உருவாக்கினவனை நோக்கி: என்ன
செய்கிறாயென்று சொல்லத்தகுமோ? உன் கிரியையானது: அவருக்குக் கைகள்
இல்லையென்று சொல்லலாமோ?

(ஏசாயா 45:5-9 )

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

[5] நீங்கள் உங்கள் வழிகளையும் உங்கள் கிரியைகளையும் நன்றாய்ச்
சீர்ப்படுத்தி, நீங்கள் மனுஷனுக்கும் மனுஷனுக்குமுள்ள வழக்கை நியாயமாய்த் தீர்த்து,
[6] பரதேசியையும் திக்கற்றவனையும் விதவையையும் ஒடுக்காமலும், குற்றமில்லாத
இரத்தத்தை இந்த ஸ்தலத்திலே சிந்தாமலும், உங்களுக்குக் கேடுண்டாக அந்நிய
தேவர்களைப் பின்பற்றாமலும் இருப்பீர்களேயாகில், [7] அப்பொழுது நான் உங்கள்
பிதாக்களுக்குக் கொடுத்த தேசமாகிய இந்த ஸ்தலத்திலே உங்களைச் சதாகாலமும்
குடியிருக்கப்பண்ணுவேன்.

[8] இதோ, ஒன்றுக்கும் உதவாத பொய்வார்த்தைகளை நீங்கள் நம்புகிறீர்கள். [9]
நீங்கள் திருடி, கொலைசெய்து, விபசாரம்பண்ணி, பொய்யாணையிட்டு, பாகாலுக்குத்
தூபங்காட்டி, நீங்கள் அறியாத அந்நிய தேவர்களைப் பின்பற்றி, [10] பிற்பாடு வந்து, என்
நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயத்திலே எனக்கு முன்பாக நின்று: இந்த
அருவருப்புகளையெல்லாம் செய்வதற்காக விடுதலை பெற்றிருக்கிறோமென்று
சொல்வீர்களோ? [11] என் நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயம் உங்கள் பார்வைக்குக்
கள்ளர்குகையாயிற்றோ? இதோ, நானும் இதைக் கண்டேன் என்று கர்த்தர்
சொல்லுகிறார்.

(எரேமியா 7:5-11)

[16] நீ இந்த ஜனத்துக்காக விண்ணப்பம் செய்யவேண்டாம், அவர்களுக்காக
மன்றாடவும் கெஞ்சவும் வேண்டாம், என்னிடத்தில், அவர்களுக்காகப் பரிந்துபேசவும்
வேண்டாம், நான் உனக்குச் செவிகொடுப்பதில்லை. [17] யூதாவின் பட்டணங்களிலும்
எருசலேமின் வீதிகளிலும் அவர்கள் செய்கிறதை நீ காணவில்லையா? [18] எனக்கு
மனமடிவுண்டாக அந்நிய தேவர்களுக்குப் பானபலிகளை வார்க்கிறார்கள், அவர்கள்
வானராக்கினிக்குப் பணியாரங்களைச் சுடும்படி பிள்ளைகள் விறகு பொறுக்குகிறார்கள்,
பிதாக்கள் நெருப்பு மூட்டுகிறார்கள், ஸ்திரீகள் மாப்பிசைகிறார்கள். [19] அவர்கள்
எனக்கா மனமடிவுண்டாக்குகிறார்கள்? தங்கள் முகங்கள் வெட்கத்துக்குட்படும்படி
அவர்கள் தங்களுக்கே அல்லவோ மனமடிவுண்டாக்குகிறார்கள் என்று கர்த்தர்
சொல்லுகிறார். [20] ஆதலால் இதோ, என் கோபமும் என் உக்கிரமும் இந்த
ஸ்தலத்தின்மேலும், மனுஷர்மேலும், மிருகங்கள்மேலும், வெளியின் மரங்கள்மேலும்,
பூமியின் கனிகள்மேலும் ஊற்றப்படும், அது அவியாமல் எரியும் என்று கர்த்தராகிய
ஆண்டவர் சொல்லுகிறார்.

(எரேமியா 7:16-20)

[23] யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு
விரோதமான குறிசொல்லுதலும் இல்லை, தேவன் என்னென்ன செய்தார் என்று
கொஞ்சக்காலத்திலே யாக்கோபையும் இஸ்ரவேலையும் குறித்துச் சொல்லப்படும்.

(எண்ணாகமம் 23:23)

[18] சூனியக்காரியை உயிரோடே வைக்கவேண்டாம். [19] மிருகத்தோடே புணருகிறவன்
எவனும் கொல்லப்படவேண்டும்.

(யாத்திராகமம் 22:18-19)

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

[10] தன் மகனையாவது தன் மகளையாவது தீக்கடக்கப்பண்ணுகிறவனும்,
குறிசொல்லுகிறவனும், நாள்பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும்,
சூனியக்காரனும், [11] மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும்,
செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம். [12]
இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்,
இப்படிப்பட்ட அருவருப்புகளின் நிமித்தம் உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன்
முன்னின்று துரத்திவிடுகிறார்.

(உபாகமம் 18:10-12)

[8] இப்பொழுதும் சுகசெல்வியே, விசாரமில்லாமல் வாழ்கிறவளே: நான் தான்,
என்னைத்தவிர ஒருவருமில்லை, நான் விதவையாவதில்லை, நான் சந்தான சேதத்தை
அறிவதில்லையென்று உன் இருதயத்திலே சொல்லுகிறவளே, நான் சொல்லுகிறதைக்
கேள். [9] சந்தான சேதமும் விதவையிருப்பும் ஆகிய இவ்விரண்டும் உனக்குச் சடிதியாக
ஒரேநாளில் வரும், உன் திரளான சூனியங்களினிமித்தமும், உன் வெகுவான ஸ்தம்பன
வித்தைகளினிமித்தமும் அவைகள் பூரணமாய் உன்மேல் வரும். [10] உன்
துன்மார்க்கத்திலே நீ திடநம்பிக்கையாயிருந்து: என்னைப் பார்க்கிறவர் ஒருவரும்
இல்லையென்றாய். உன் ஞானமும் உன் அறிவுமே உன்னைக்கெடுத்தது, நான் தான்,
என்னைத்தவிர ஒருவருமில்லையென்று உன் இருதயத்தில் எண்ணினாய். [11] ஆகையால்
தீங்கு உன்மேல்வரும், அது எங்கேயிருந்து உதித்ததென்று நீ அறிவாய், விக்கினம்
உன்மேல் வரும், நீ அதை நிவிர்த்தியாக்கமாட்டாய், நீ அறியாதபடிக்குச் சடிதியாய்
உண்டாகும் பாழ்க்கடிப்பு உன்மேல் வரும். [12] நீ உன் சிறுவயதுமுதல் பிரயாசப்பட்டுப்
பழகிவருகிற உன் ஸ்தம்பன வித்தைகளையும், உன் திரளான சூனியங்களையும் நீ
அநுசரித்து நில், அவைகளால் உனக்குப் பிரயோஜனம் உண்டோ, பலன் உண்டோ,
பார்ப்போம். [13] உன் திரளான யோசனைகளினால் நீ இளைத்துப்போனாய்,
இப்பொழுதும் ஜோசியரும், நட்சத்திரம் பார்க்கிறவர்களும், அமாவாசி
கணிக்கிறவர்களும் எழும்பி, உனக்கு நேரிடுகிறவைகளுக்கு உன்னை விலக்கி
இரட்சிக்கட்டும். [14] இதோ, அவர்கள் தாளடியைப்போல இருப்பார்கள், நெருப்பு
அவர்களைச் சுட்டெரிக்கும், அவர்கள் தங்கள் பிராணனை அக்கினிஜூவாலையினின்று
விடுவிப்பதில்லை, அது குளிர்காயத்தக்க தழலுமல்ல, எதிரே உட்காரத்தக்க
அடுப்புமல்ல. [15] உன் சிறுவயதுமுதல் நீ பிரயாசப்பட்டு எவர்களுடன் வியாபாரம்
பண்ணினாயோ, அவர்களும் அப்படியே இருப்பார்கள், அவரவர் தங்கள் போக்கிலே
போய் அலைவார்கள், உன்னை இரட்சிப்பார் இல்லை.

(ஏசாயா 47:8-15)

[1] பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: [2] நீ இஸ்ரவேல் புத்திரருக்குச்
சொல்லவேண்டியது என்னவென்றால்: நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். [3] நீங்கள்
குடியிருந்த எகிப்துதேசத்தாருடைய செய்கைகளின்படி செய்யாமலும், நான் உங்களை
அழைத்துப்போகிற கானான் தேசத்தாருடைய செய்கையின்படி செய்யாமலும்,

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

அவர்களுடைய முறைமைகளின்படி நடவாமலும், 4 என்னுடைய நியாயங்களின்படி
செய்து, என்னுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள், நான் உங்கள்
தேவனாகிய கர்த்தர். 5 ஆகையால் என் கட்டளைகளையும் என் நியாயங்களையும்
கைக்கொள்ளக்கடவீர்கள், அவைகளின்படி செய்கிறவன் எவனும் அவைகளால்
பிழைப்பான், நான் கர்த்தர். 6 ஒருவனும் தனக்கு நெருங்கின இனமாகிய ஒருத்தியை
நிர்வாணமாக்கும்படி அவளைச் சேரலாகாது, நான் கர்த்தர். 7 உன் தகப்பனையாவது
உன் தாயையாவது நிர்வாணமாக்கலாகாது, அவள் உன் தாயானவள், அவளை
நிர்வாணமாக்கலாகாது. 8 உன் தகப்பனுடைய மனைவியை நிர்வாணமாக்கலாகாது,
அது உன் தகப்பனுடைய நிர்வாணம். 9 உன் தகப்பனுக்காவது உன் தாய்க்காவது
வீட்டிலாகிலும் புறத்திலாகிலும் பிறந்த குமாரத்தியாகிய உன் சகோதரியை
நிர்வாணமாக்கலாகாது. 10 உன் குமாரருடைய மகளையாவது உன்
குமாரத்தியினுடைய மகளையாவது நிர்வாணமாக்கலாகாது, அது உன்னுடைய
நிர்வாணம். 11 உன் தகப்பனுடைய மனைவியினிடத்தில் உன் தகப்பனுக்குப் பிறந்த
குமாரத்தியை நிர்வாணமாக்கலாகாது, அவள் உனக்குச் சகோதரி. 12 உன்
தகப்பனுடைய சகோதரியை நிர்வாணமாக்கலாகாது, அவள் உன் தகப்பனுக்கு
நெருங்கின இனமானவள். 13 உன் தாயினுடைய சகோதரியை நிர்வாணமாக்கலாகாது,
அவள் உன் தாய்க்கு நெருங்கின இனமானவள். 14 உன் தகப்பனுடைய சகோதரனை
நிர்வாணமாக்கலாகாது, அவன் மனைவியைச் சேராயாக, அவள் உன் தகப்பனுடைய
சகோதரி. 15 உன் மருமகளை நிர்வாணமாக்கலாகாது, அவள் உன் குமாரனுக்கு
மனைவி, அவளை நிர்வாணமாக்கலாகாது. 16 உன் சகோதரனுடைய மனைவியை
நிர்வாணமாக்கலாகாது, அது உன் சகோதரனுடைய நிர்வாணம். 17 ஒரு ஸ்திரீயையும்
அவள் மகளையும் நிர்வாணமாக்கலாகாது, அவளுடைய குமாரரின் மகளையும்
அவளுடைய குமாரத்தியின் மகளையும் நிர்வாணமாக்கும்படி விவாகம்பண்ணலாகாது,
இவர்கள் அவளுக்கு நெருங்கின இனமானவர்கள், அது முறைகேடு. 18 உன் மனைவி
உயிரோடிருக்கையில், அவளுக்கு உபத்திரவமாக அவள் சகோதரியையும்
நிர்வாணமாக்கும்பொருட்டு அவளை விவாகம்பண்ணலாகாது. 19 ஸ்திரீயானவள்
சூதகத்தால் விலக்கத்திலிருக்கையில், அவளை நிர்வாணமாக்க அவளோடே சேராதே.
20 பிறனுடைய மனைவியோடே சேரும்படி சயனித்து, அவளால் உன்னைத்
தீட்டுப்படுத்திக்கொள்ளவேண்டாம். 21 நீ உன் சந்ததியில் யாரையாகிலும்
மோளேகுக்கென்று தீக்கடக்கும்படி இடங்கொடாதே, உன் தேவனுடைய நாமத்தைப்
பரிசுத்தக் குலைச்சலாக்காதே, நான் கர்த்தர். 22 பெண்ணோடு சம்யோகம்
பண்ணுகிறதுபோல ஆணோடே சம்யோகம் பண்ணவேண்டாம், அது அருவருப்பானது. 23
யாதொரு மிருகத்தோடும் நீ புணர்ச்சிசெய்து, அதினாலே உன்னைத்
தீட்டுப்படுத்தவேண்டாம், ஸ்திரீயானவள் மிருகத்தோடே புணரும்படி அதற்கு முன்பாக
நிற்கலாகாது, அது அருவருப்பான தாறுமாறு. 24 இவைகளில் ஒன்றினாலும் உங்களைத்
தீட்டுப்படுத்தாதிருங்கள், நான் உங்கள் முன்னின்று துரத்திவிடுகிற ஜாதிகள்
இவைகளெல்லாவற்றினாலும் தங்களைத் தீட்டுப்படுத்தியிருக்கிறார்கள், தேசமும்
தீட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. 25 ஆகையால் அதின் அக்கிரமத்தை விசாரிப்பேன், தேசம்
தன் குடிகளைக் கக்கிப்போடும். 26 இந்த அருவருப்புகளையெல்லாம் உங்களுக்குமுன்
இருந்த அந்த தேசத்தின் மனிதர் செய்ததினாலே தேசம் தீட்டாயிற்று. 27 இப்பொழுதும்
உங்களுக்கு முன் இருந்த ஜாதிகளை தேசம் கக்கிப்போட்டதுபோல, நீங்கள் அதைத்
தீட்டுப்படுத்தும்போது அது உங்களையும் கக்கிப்போடாதபடிக்கு, 28 நீங்கள் என்
கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொண்டு, தேசத்திலே

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

பிறந்தவனானாலும் உங்கள் நடுவே தங்குகிற அந்நியனானாலும் இந்த
அருவருப்புகளில் ஒன்றையும் செய்யவேண்டாம். [29] இப்படிப்பட்ட
அருவருப்பானவைகளில் யாதொன்றை யாராவது செய்தால், செய்த அந்த
ஆத்துமாக்கள் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவார்கள். [30] ஆகையால்
உங்களுக்குமுன் செய்யப்பட்ட அருவருப்பான முறைமைகளில் யாதொன்றை நீங்கள் செய்து, அவைகளால் உங்களைத் தீட்டுப்படுத்திக்கொள்ளாதபடிக்கு என் கட்டளையைக் கைக்கொள்ளுங்கள், நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல் என்றார்.

(லேவியராகமம் 18:1-30)

[28]நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிறஎவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று.

(மத்தேயு 5:28)

[36] மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

(மத்தேயு 12:36)

[20] மனுஷனுக்குள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். [21]
எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும். [22] களவுகளும்,
பொருளாசைகளும்,துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், துாஷணமும், பெருமையும், மதிகேடும், புறப்பட்டுவரும். [23] பொல்லாங்கானவைகளாகிய
இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்.

(மாற்கு 7:20-23)

[28] எவையெனில், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருங்குண்டு செத்ததிற்கும், வேசித்தனத்திற்கும், நீங்கள் விலகியிருக்கவேண்டுமென்பதே. [29] அவசியமான இவைகளையல்லாமல் பாரமான
வேறொன்றையும் உங்கள்மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்தஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது. இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக்கொள்வது நலமாயிருக்கும். சுகமாயிருப்பீர்களாக என்று எழுதினார்கள்.

(அப்போஸ்தலருடைய நடபடிகள் 15:28-29)

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

[25] தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகளைத்தொழுது
சேவியாமல் சிருஷ்டியைத்தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும்
ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென். [26] இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான
இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார், அந்தப்படியே அவர்களுடைய பெண்கள்
சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். [27]
அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர்
விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து,
தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள். [28]
தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு
மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக்
கேடானசிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். [29] அவர்கள் சகலவித அநியாயத்தினாலும்,
வேசித்தனத்தினாலும், துரோகத்திலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும்
நிறையப்பட்டு, பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும்,
வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், [30] புறங்கூறுகிறவர்களுமாய்,
அவதூறுபண்ணுகிறவர்களுமாய்,தேவபகைஞருமாய், துராகிருதம்பண்ணுகிறவர்களுமாய்,
அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப்
பிணைக்கிறவர்களுமாய், பெற்றாருக்குப் கீழ்ப்படியாதவர்களுமாய், [31]
உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய்,
சுபாவஅன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய்,
இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். [32] இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள்
மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை
அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச்
செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள்.

(ரோமர் 1:25-32)

[19]மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன. இவையாவன: விபசாரம்,
வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், [20] விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள்,
விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள்,
மார்க்கபேதங்கள், [21] பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள்
முதலானவைகளே. இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவாகள் தேவனுடைய ராஜ்யத்தைச்
சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் உங்களுக்குச் சொன்னதுபோல இப்பொழுதும்
உங்களுக்குச் சொல்லுகிறேன்.

(கலாத்தியர் 5:19-21)

[58] உன் தேவனாகிய கர்த்தர் என்னும் மகிமையும் பயங்கரமுமான நாமத்திற்குப்
பயப்படும்படிக்கு, நீ இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிற இந்த நியாயப்பிரமாண

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

வார்த்தைகளின்படியெல்லாம் நடக்கக் கவனமாயிராவிட்டால், 59 கர்த்தர் நீங்காத பெரிய
வாதைகளாலும் நீங்காத கொடிய ரோகங்களாலும் உன்னையும் உன் சந்ததியையும்
அதிசயமாய் வாதித்து, 60நீ கண்டு பயந்த எகிப்து வியாதிகளெல்லாம் உன்மேல்
வருவிப்பார், அவைகள் உன்னைப் பற்றிக்கொள்ளும். 61 இந்த நியாயப்பிரமாண
புஸ்தகத்தில் எழுதியிராத எல்லாப் பிணியையும் வாதையையும் நீ அழியுமளவும்
கர்த்தர் உன்மேல் வரப்பண்ணுவார். 62 திரட்சியிலே வானத்து நட்சத்திரங்களைப்போல்
இருந்த நீங்கள், உங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்குச்
செவிகொடாமற்போனதினால், கொஞ்சம் ஜனமாய்ப்போவீர்கள். 63 கர்த்தர் உங்களுக்கு
நன்மை செய்யவும் உங்களைப் பெருகப்பண்ணவும் எப்படி உங்கள்மேல்
இரம்மியமாயிருந்தாரோ, அப்படியே கர்த்தர் உங்களை அழிக்கவும் உங்களை
அதம்பண்ணவும் இரம்மியமாயிருப்பார், நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசத்திலிருந்து
பிடுங்கிப்போடப்படுவீர்கள 64 கர்த்தர் உன்னைப் பூமியின் ஒரு முனை துவக்கி பூமியின்
மறுமுனைமட்டும் இருக்கிற எல்லா ஜனங்களுக்குள்ளும் சிதற அடிப்பார், அங்கே நீயும்
உன் பிதாக்களும் அறியாத மரமும் கல்லுமான அந்நிய தேவர்களைச் சேவிப்பாய். 65
அந்த ஜாதிகளுக்குள்ளே உனக்கு இளைப்பாறுதல் இராது, உன் உள்ளங்கால்கள்
தங்கித் தரிக்க இடமும் இராது, அங்கே கர்த்தர் உனக்குத் தத்தளிக்கிற
இருதயத்தையும், சோர்ந்துபோகிற கண்களையும், மனச்சஞ்சலத்தையும் கொடுப்பார்.

(உபாகமம் 28:58-65)

10 உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து, இந்த
நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிற அவருடைய கற்பனைகளையும்
அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளும்போதும், உன் தேவனாகிய
கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும்
திரும்பும்போதும், கர்த்தர் உன் பிதாக்கள்மேல் சந்தோஷமாயிருந்ததுபோல,
உன்மேலும் உனக்கு நன்மை உண்டாகத் திரும்பவும் சந்தோஷமாயிருப்பார்.

11 நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளை உனக்கு மறைபொருளும் அல்ல,
அது உனக்குத் தூரமானதும் அல்ல. 12 நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி
செய்யும்பொருட்டு, எங்கள்நிமித்தம் வானத்துக்கு ஏறி, அதை எங்களுக்குக்
கொண்டுவருகிறவன் யாரென்று நீ சொல்லத்தக்கதாக, அது வானத்திலுள்ளதும் அல்ல,
13 நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள்நிமித்தம்
சமுத்திரத்தைக் கடந்து, அதைக் கொண்டுவருகிறவன் யார் என்று நீ
சொல்லத்தக்கதாக, அது சமுத்திரத்திற்கு அப்புறத்திலுள்ளதும் அல்ல,14 நீ அந்த
வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன்
வாயிலும் உன் இருதயத்ததிலும் இருக்கிறது,

15 இதோ, ஜீவனையும் நன்மையையும், மரணத்தையும் தீமையையும் இன்று
உனக்கு முன்னே வைத்தேன். 16 நீ பிழைத்துப் பெருகும்படிக்கும், நீ
சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை
அசீர்வதிக்கும்படிக்கும், நீ உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூரவும், அவர் வழிகளில்
நடக்கவும், அவர் கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும்
கைக்கொள்ளவும், நான் இன்று உனக்குக் கற்பிக்கிறேன். 17 நீ கேளாதபடிக்கு, மனம்

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

பேதித்து, இழுப்புண்டுபோய், வேறே தேவர்களைப் பணிந்து, அவர்களைச் சேவிப்பாயானால், [18] நீங்கள் சுதந்தரிக்கிறதற்கு யோர்தானைக் கடந்துபோகிற தேசத்தில் நெடுநாள் வாழாமல், நிச்சயமாய் அழிந்துபோவீர்கள் என்பதை இன்று உங்களுக்கு அறிவிக்கிறேன்.

(உபாகமம் 30:10-18)

2 Do not follow your inclination and strength
in pursuing the desires of your heart.
3 Do not say, "Who can have power over me?"
for the Lord will surely punish you.
4 Do not say, "I sinned, yet what has happened to me?"
for the Lord is slow to anger.
5 Do not be so confident of forgiveness
that you add sin to sin.
6 Do not say, "His mercy is great,
he will forgive the multitude of my sins,"
for both mercy and wrath are with him,
and his anger will rest on sinners.
7 Do not delay to turn back to the Lord,
and do not postpone it from day to day;
for suddenly the wrath of the Lord will come upon you,
and at the time of punishment you will perish.
8 Do not depend on dishonest wealth,
for it will not benefit you on the day of calamity.
9 Do not winnow in every wind,
or follow every path.

(Sirach 5:2-9)

12 நீ போய் வடதிசையை நோக்கிக் கூறவேண்டிய வார்த்தைகள் என்னவென்றால்:
சீர்கெட்ட இஸ்ரவேலே, திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார், நான் உங்கள்மேல் என்
கோபத்தை இறங்கப்பண்ணுவதில்லை, நான் கிருபையுள்ளவரென்று கர்த்தர்
சொல்லுகிறார், நான் என்றைக்கும் கோபம் வைக்கமாட்டேன். 13 நீயோ, உன்
தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணி, பச்சையான சகல
மரத்தின்கீழும் அந்நியரோடே சோரமார்க்கமாய் நடந்து, உன் அக்கிரமத்தையும், என்
சத்தத்துக்குச் செவிகொடாமற்போனதையும் ஒத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

(எரேமியா 3:12-13)

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

[8] வட்டிக்குக் கொடாமலும், பொலிசை வாங்காமலும், அநியாயத்துக்குத்
தன்கையை விலக்கி, மனிதருக்குள்ள வழக்கை உண்மையாய்த் தீர்த்து, [9] என்
கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு,
உண்மையாயிருப்பானாகில் அவனே நீதிமான், அவன் பிழைக்கவே பிழைப்பான் என்று
கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

[10] ஆனாலும் அவனுக்கு ஒரு குமாரன் பிறந்து, அவன் கள்ளனும்
இரத்தஞ்சிந்துகிறவனும், மேற்சொல்லிய கடமைகளின்படி நடவாமல், [11] இவைகளில்
ஒன்றுக்கொப்பானதைச் செய்கிறவனுமாயிருந்து, மலைகளின்மேல் சாப்பிட்டு, தன்
அயலானுடைய மனைவியைத் தீட்டுப்படுத்தி, [12] சிறுமையும் எளிமையுமானவனை
ஒடுக்கி, கொள்ளைக்காரனாயிருந்து, அடைமானத்தைத் திரும்பக் கொடாமல், நரகலான
விக்கிரகங்களுக்கு நேராகத் தன் கண்களை ஏறெடுத்து, அருவருப்பானதைச் செய்து,[13]
வட்டிக்குக் கொடுத்து, பொலிசை வாங்கினால், அவன் பிழைப்பானோ? அவன்
பிழைப்பதில்லை, இந்த எல்லா அருவருப்புகளையும் செய்தானே, அவன் சாகவே
சாவான், அவன் இரத்தப்பழி அவன்மேல் இருக்கும்.

[14] பின்னும், இதோ, அவனுக்கு ஒரு குமாரன் பிறந்து, அவன் தன் தகப்பன்
செய்த எல்லாப் பாவங்களையும் கண்டு, தான் அவைகளின்படி செய்யாதபடிக்கு
எச்சரிக்கையாயிருந்து,

[15] மலைகளின்மேல் சாப்பிடாமலும், இஸ்ரவேல் வம்சத்தாரின் நரகலான
விக்கிரகங்களுக்கு நேராகத் தன் கண்களை ஏறெடுக்காமலும், தன் அயலானுடைய
மனைவியைத் தீட்டுப்படுத்தாமலும்,

[16] ஒருவனையும் ஒடுக்காமலும், அடைமானத்தை வைத்துக்கொண்டிராமலும்,
கொள்ளையிடாமலும், தன் அப்பத்தைப் பசித்தவனுக்குப் பங்கிட்டு,
வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்திரந்தரிப்பித்து,

[17] சிறுமையானவனுக்கு நோவுண்டாக்காதபடித் தன் கையை விலக்கி, வட்டியும்
பொலிசையும் வாங்காமலிருந்து என் நியாயங்களின்படி செய்து, என் கட்டளைகளில்
நடந்தால், அவன் தன் தகப்பனுடைய அக்கிரமத்தினிமித்தம் சாகாமல் பிழைக்கவே
பிழைப்பான்.

(எசேக்கியேல் 18:8-17)

[30] ஆகையால் இஸ்ரவேல் வம்சத்தாரே, நான் உங்களில் அவனவனை அவனவன்
வழிகளுக்குத் தக்கதாக நியாயந்தீர்ப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர்
சொல்லுகிறார், நீங்கள் மனந்திரும்புங்கள், உங்களுடைய எல்லா மீறுதல்களையும்
விட்டுத் திரும்புங்கள், அப்பொழுது அக்கிரமம் உங்கள் கேட்டுக்குக்
காரணமாயிருப்பதில்லை. [31] நீங்கள் துரோகம்பண்ணின உங்களுடைய எல்லாத்

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

துரோகங்களையும் உங்கள்மேல் இராதபடிக்கு விலக்கி, உங்களுக்குப் புது இருதயத்தையும் புது ஆவியையும் உண்டுபண்ணிக்கொள்ளுங்கள், இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் ஏன் சாகவேண்டும்? [32]மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள், சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

(எசேக்கியேல் 18:30-32)

[10]மனுபுத்திரனே, நீ இஸ்ரவேல் வம்சத்தாரை நோக்கி: எங்கள் துரோகங்களும் எங்கள் பாவங்களும் எங்கள்மேல் இருக்கிறது, நாங்கள் சோர்ந்துபோகிறோம், நாங்கள் பிழைப்பது எப்படியென்று நீங்கள் சொல்லுகிறீர்கள். [11] கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன், இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள், நீங்கள் ஏன் சாகவேண்டும் என்கிறார் என்று அவர்களோடே சொல்லு. [12] மனுபுத்திரனே, நீ உன் ஜனத்தின் புத்திரரை நோக்கி: நீதிமான் துரோகம்பண்ணுகிற நாளிலே அவனுடைய நீதி அவனைத் தப்புவிப்பதில்லை, துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்தைவிட்டுத் திரும்புகிற நாளிலே அவன் தன் அக்கிரமத்தினால் விழுந்துபோவதுமில்லை, நீதிமான் பாவஞ்செய்கிற நாளிலே தன் நீதியினால் பிழைப்பதுமில்லை. [13] பிழைக்கவே பிழைப்பாய் என்று நான் நீதிமானுக்குச் சொல்லும்போது, அவன் தன் நீதியை நம்பி, அநியாயஞ்செய்தால், அவனுடைய நீதியில் ஒன்றும் நினைக்கப்படுவதில்லை: அவன் செய்த தன் அநியாயத்திலே சாவான். [14] பின்னும் சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லும்போது, அவன் தன் பாவத்தைவிட்டுத் திரும்பி, நியாயமும் நீதியுஞ்செய்து, [15] துன்மார்க்கன் தான் வாங்கின அடைமானத்தையும் தான் கொள்ளையிட்ட பொருளையும் திரும்பக்கொடுத்துவிட்டு, அநியாயம் செய்யாதபடி ஜீவப்பிரமாணங்களில் நடந்தால், அவன் சாகாமல் பிழைக்கவே பிழைப்பான். [16] அவன் செய்த அவனுடைய எல்லாப் பாவங்களும் அவனுக்கு விரோதமாக நினைக்கப்படுவதில்லை, அவன் நியாயமும் நீதியும் செய்தான், பிழைக்கவே பிழைப்பான் என்று சொல்லு.

(எசேக்கியேல் 33:10-16)

[21]பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. [22] அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே!உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். [23]

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச்
செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச்
சொல்லுவேன். 24 ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு.
இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக்
கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். 25 பெருமழை சொரிந்து, பெருவெள்ளம்
வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை,
ஏன்னென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. 26 நான்
சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன்
எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு
ஒப்பிடப்படுவான். 27 பெருமழை சொரிந்தது, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து,
அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது, விழுந்து முழுவதும் அழிந்தது
என்றார்.

(மத்தேயு 7:21-27)

17 ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி
எச்சரிக்கிறது என்னவெனில், மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே
நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள். 18 அவர்கள் புத்தியில்
அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும்
அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து, 19
உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி,
தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். 20 நீங்களோ இவ்விதமாய்க்
கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை. 21 இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே,
நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. 22 அந்தப்படி,
முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய
மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, 23 உங்கள் உள்ளத்திலே புதிதான
ஆவியுள்ளவர்களாகி, 24 மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச்
சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். 25 அன்றியும், நாம்
ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன்
பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன். 26 நீங்கள் கோபங்கொண்டாலும்
பாவஞ்செய்யாதிருங்கள். சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல்
தணியக்கடவது. 27 பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள். 28 திருடுகிறவன் இனித்
திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு
உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலைசெய்து, பிரயாசப்படக்கடவன்.
29 கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்த புறப்படவேண்டாம்.
பக்திவிருத்திக்குஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே
கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள். 30 அன்றியும், நீங்கள்
மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத்
துக்கப்படுத்தாதிருங்கள். 31 சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும்,
துஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. 32

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

(எபேசியர் 4:17-32)

47ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான்
நியாயந்தீர்ப்பதில்லை, நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை
இரட்சிக்கவந்தேன். 48 என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை
நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது, நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில்
நியாயந்தீர்க்கும்.

(யோவான் 12:47-48)

12 அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.

(அப்போஸ்தலருடைய நடபடிகள் 4:12)

43 அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்.

(அப்போஸ்தலருடைய நடபடிகள் 10:43)

37 தேவனால் எழுப்பப்பட்டவரோ அழிவைக் காணவில்லை. 38 ஆதலால் சகோதரரே, இவர் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறதென்றும்,

39மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்படக் கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது.

(அப்போஸ்தலருடைய நடபடிகள் 13:37-39)

28 வேதபாரகரில் ஒருவன் அவர்கள் தர்க்கம்பண்ணுகிறதைக்கேட்டு,
அவர்களுக்கு நன்றாய் உத்தரவு சொன்னாரென்று அறிந்து,அவரிடத்தில் வந்து,
கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்று கேட்டான். 29 இயேசு அவனுக்கு

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

பிரதியுத்தரமாக: கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால்: இஸ்ரவேலே
கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். 30 உன் தேவனாகிய
கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு
மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை.
31 இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ
அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே: இவைகளிலும் பெரிய
கற்பனை வேறொன்றுமில்லை என்றார்.

(மாற்கு 12:28-31)

21 என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான், நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்.

(யோவான் 14:21)

23 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால்,
அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்,
நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம். 24 என்னில்
அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான். நீங்கள் கேட்கிற வசனம்
என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது.

(யோவான் 14:23-24)

4 அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்கு பொறாமையில்லை. அன்பு
தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது. 5 அயோக்கியமானதைச் செய்யாது,
தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது. 6 அநியாயத்தில்
சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். 7 சகலத்தையும் தாங்கும்,
சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். 8 அன்பு
ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம். அந்நிய
பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். 9 நம்முடைய அறிவு
குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. 10 நிறைவானது
வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.

(1 கொரிந்தியர் 13:4-10)

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

[22]ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், 23 சாந்தம், இச்சையடக்கம். இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. 24 கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.

(கலாத்தியர் 5:22-24)

[1]கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன்.

[2] அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.

[3] அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.

[4] நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர், உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.

[5] என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர், என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

[6] என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும், நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.

(சங்கீதம் 23)

[1] உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்.
[2] நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.
[3] அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார்.
[4] அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார், அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய், அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்.
[5] இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும்,

[6] இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்.
[7] உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது.

[8] உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்குவரும் பலனைக் காண்பாய்.

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

9 எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக்கொண்டாய்.

10 ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது.
11 உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.

12 உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள்.

13 சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய்.

14 அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன், என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்.

15 அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன், ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.

16 நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.

(சங்கீதம் 91)

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

1 எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்.

2 வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.

3 உன் காலைத் தள்ளாடவொட்டார், உன்னைக் காக்கிறவர் உறங்கார்.

4 இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை.

5 கர்த்தர் உன்னைக் காக்கிறவர், கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார்.

6 பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை.

7 கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார், அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.

8 கர்த்தர் உன் போக்கையும் உன்வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்.

(சங்கீதம் 121)

1 இப்போதும், என் தாசனாகிய யாக்கோபே, நான் தெரிந்துகொண்ட இஸ்ரவேலே, கேள்.

2 உன்னை உண்டாக்கினவரும், தாயின் கர்ப்பத்தில் உன்னை உருவாக்கினவரும், உனக்குத் துணைசெய்கிறவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: என் தாசனாகிய யாக்கோபே, நான் தெரிந்துகொண்ட யெஷூரனே, பயப்படாதே.

3 தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன், உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்.
4 அதினால் அவர்கள் புல்லின் நடுவே நீர்க்கால்களின் ஓரத்திலுள்ள அலரிச்செடிகளைப்போல வளருவார்கள்.

5 ஒருவன், நான் கர்த்தருடையவன் என்பான், ஒருவன், யாக்கோபின் பேரைத் தரித்துக்கொள்வான், ஒருவன், தான் கர்த்தருடையவன் என்று கையெழுத்துப்போட்டு, இஸ்ரவேலின் நாமத்தைத் தரித்துக்கொள்வான்.

(ஏசாயா 44:1-5)

10 கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின்
வல்லமையிலும் பலப்படுங்கள். 11 நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத்
திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும்
தரித்துக்கொள்ளுங்கள். 12 ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல,
துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார
லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின்

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. 13 ஆகையால், தீங்குநாளிலே
அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும்
திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும்
எடுத்துக்கொள்ளுங்கள். 14 சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில்
கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும், 15
சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே
தொடுத்தவர்களாயும், 16 பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம்
அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாமென்னும் கேடகத்தைப்
பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள். 17 இரட்சணியமென்னும் தலைச்சீராவையும்,
தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

18எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும்
ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல
பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள

(எபேசியர் 6:10-18)

1கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.

2 தேவாதி தேவனைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது.

3 கர்த்தாதி கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது.

4 ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது.

5 வானங்களை ஞானமாய் உண்டாக்கினவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது.

6 தண்ணீர்களுக்கு மேலே பூமியைப் பரப்பினவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது.

7 பெரிய சுடர்களை உண்டாக்கினவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது,

8 பகலில் ஆளச் சூரியனைப் படைத்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது.

9 இரவில் ஆளச் சந்திரனையும் நட்சத்திரங்களையும் படைத்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது.

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

[10] எகிப்தியருடைய தலைச்சன்களைச் சங்கரித்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை
என்றுமுள்ளது.

[11] அவர்கள் நடுவிலிருந்து இஸ்ரவேலைப் புறப்படப்பண்ணினவரைத் துதியுங்கள், அவர்
கிருபை என்றுமுள்ளது.

[12] பலத்த கையினாலும் ஓங்கிய புயத்தினாலும் அதைச் செய்தவரைத் துதியுங்கள்,
அவர் கிருபை என்றுமுள்ளது.

[13] சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிரித்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை
என்றுமுள்ளது.

[14] அதின் நடுவே இஸ்ரவேலைக் கடந்துபோகப்பண்ணினவரைத் துதியுங்கள், அவர்
கிருபை என்றுமுள்ளது.

[15] பார்வோனையும் அவன் சேனைகளையும் சிவந்த சமுத்திரத்தில்
கவிழ்த்துப்போட்டவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது.

[16] தம்முடைய ஜனங்களை வனாந்தரத்தில் நடத்தினவரைத் துதியுங்கள், அவர் கிருபை
என்றுமுள்ளது.

[17] பெரிய ராஜாக்களைச் சங்கரித்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது

[18] பிரபலமான ராஜாக்களை அழித்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது.

[19] எமோரியரின் ராஜாவாகிய சீகோனை அழித்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை
என்றுமுள்ளது.

[20] பாசானின் ராஜாவாகிய ஓகை அழித்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை
என்றுமுள்ளது.

[21] அவர்கள் தேசத்தைச் சுதந்தரமாகத் தந்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை
என்றுமுள்ளது.

[22] அதைத் தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலுக்குச் சுதந்தரமாகவே தந்தவரைத்

Copyright © SA(RC) Ministries. All rights reserved.

துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது.

23 நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது.

24 நம்முடைய சத்துருக்களின் கையிலிருந்து நம்மை விடுதலைபண்ணினவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது.

25 மாம்சதேகமுள்ள யாவுக்கும் ஆகாரங் கொடுக்கிறவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது.

26 பரலோகத்தின் தேவனைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது.

(சங்கீதம் 136)

11 நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான்
உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர்
சொல்லுகிறார், அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.
12 அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி
விண்ணப்பம்பண்ணுவீர்கள், நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்.
13 உங்கள் முழு
இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில்
கண்டுபிடிப்பீர்கள்.
14 நான் உங்களுக்குக் காணப்படுவேன் என்று கர்த்தர்
சொல்லுகிறார், நான் உங்கள் சிறையிருப்பைத்திருப்பி, நான் உங்களைத் துரத்திவிட்ட
எல்லா ஜாதிகளிலும் எல்லா இடங்களிலுமிருந்து உங்களைச் சேர்த்து, நான்
உங்களை விலக்கியிருந்த ஸ்தலத்துக்கே உங்களைத் திரும்பிவரப்பண்ணுவேன் என்று
கர்த்தர் சொல்லுகிறார்.

(எரேமியா 29:11-14)

Copyright © SA(RC) Ministries. All rights reserved.